பிரஜோத்பத்தி-ஞு 1931-ஞு
ஆனி-மீ 16உ ஜூன் மீ 30உ

ஸ்ரீ:
ஸ்ரீமதே ரங்கராமானுஜமுனயே நம:

ஸநாதன வைதிகானுஷ்டானங்களுடைய
யதார்த்த விஷயத்தை அறிவிக்கும்,

"யதார்த்தவாதினீ"

என்ற

ஓர் மாதாந்தர பத்திரிகை.

2-வது ஸஞ்சிகை.

பத்திராதிபர்,
வங்கீபுரம்-வித்வான் R. V. இராமாநுஜாசாரியார்.

தெற்கு சித்திரவீதி,
164 நெ. வீடு,
ஸ்ரீரங்கம் S. I. RY.

உள்ளூருக்கு வருஷச்சந்தா ரூ. 1—0
அயலூர்களுக்கு வருஷச்சந்தா ரூ. 1—8
தனிப்பிரதி 1க்கு விலை அணா. 0—2

1931-ஞு

4 JUL 1931

கோவாபரேடிவ் பி[illegible] திருச்சி.

கோவில் அர்ச்சனை விஷயம்.

பெரிய பெருமாள் ஸன்னிதியிலும், ஸ்ரீரங்க நாச்சியார் ஸன்னிதியிலும் நடக்கும் அஸ்திரமான அர்ச்சனைகளில் தேவஸ்தானத்திற்குள்ள வீதத்தை முந்தி ஜோடிபாபத்தில் ஏலம்விட்டு வந்தார்கள். அதிக லாபத்தை உத்தேசித்து நாளது 1340-ம் பஸலிக்கு ஏலத்தில்விடாமல் 2 ஸன்னிதிகளிலும் சீட்டுக் கொடுத்து நடத்தியதில் தேவஸ்தானத்திற்கு சுமார் ரூ. ஆயிரம் வரையில் நஷ்டமென்று கேழ்விப்படுகிறோம். ஆனதால் அடுத்த 1341-ம் பஸலிக்குப் பழைய வழக்கப்படி ஏலத்தில் விடுவார்களென்று நம்புகிறோம்.

R. V. ராமானுஜாசாரியார்,
ஸ்ரீரங்கம்.

பத்திரிகாபிமானிகளுக்கு விண்ணப்பம்.

நமது ஸ்ரீரங்கம் கோயில் ஸ்ரீரங்கநாதனுடைய கோயில் விஷயங்களையெல்லாம் யதார்த்தமாக வெளியிடவும் சீர்திருத்தவுமே இப்பத்திரிகை வெளிவருவதால், அபிமானிகள் வருஷச் சந்தா தொகையைக்கொடுத்து பத்திரிகையைப் பெற்றுக்கொண்டு பத்திரிகையை மேன்மேலும் விருத்திக்கிக்கொண்டுவரவேணுமென்று அபிமானிகளுக்கு இயற்கையாயுள்ள அபிமானத்தை மேலும் தூண்டுகிறோம்.

R. V. ராமானுஜாசாரியார்,
ஸ்ரீரங்கம்.

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத

ஸ்ரீ ரங்கநாத பரப்பிரஹ்மணே நம:

4 JUL 1931

ஸ்ரீரங்கம் முதலிய தேவஸ்தானுதிகளுடைய

ஸநாதனமான வைதிகானுஷ்டானங்களின்

[யதார்த்தவாதினீ]

என்னும் பிரதிமாதம் பௌர்ணமியில் வெளிவரும் பத்திரிகை.

[பிரஜோத்பத்தி-ஹூ ஆனி-மீ 16 உ.]

(2-தோழர்களுள் ஸம்பாஷணம்)

வினு விடை.

பீமண்ணு—மித்திரா! **யதார்த்தவாதினீ** என்ற ஓர் பத்திரிகை ஸ்ரீரங்கம் என்ற நகரத்தில் உலாவுகின்றதே அதைப் பார்த்தீர்களா.

ராமண்ணு—நண்பனே! பத்திரிகையைப் பார்த்தேன். பெயருக்குத் தக்கதுபோல் உண்மையே காண்கின்றது. ஸம்பிரதாயம் பற்பலவிதமாய் இருப்பதால் பற்பல ஆக்ஷேபங்களுண்டாகலாம். ஸாவதானத்தில் ஸமாதானமேற்படும்.

பீமண்ணு—சரி ஆகிலும் அப்பத்திரிகையில் **இராமானுஜாசாரியருக்கு** சிறிதேனும் ஸ்ரீரங்கம் கோவில் வேலையில் ஸம்பந்தமில்லையென்று எழுதப் பட்டிருக்கிறது. ஆனதால் பத்திராதிபர் இலௌகிகமென்ளளவேனும்றி யாதவரென்றும், சுத்த சக்கு வைதிகரென்றம் தோன்றுகிறது. தமது அபிப்பிராயமெப்படி.

ராமண்ணு—பீமண்ணு! இராமானுஜன் யதிவரராதலால் அந்த ஸன்யாஸாசிரமத்திற்கு விருத்தமான நடவடிக்கைகளை அவர் [illegible] பத்திராதிபர் ஒத்துக்கொள்ளவில்லை. மேலும் பெரி[illegible]

தாய நூல்களில் இராமானுஜன் தமது “ முதுமைமிகுந்த நிலைமையில் கூட இரண்டு சிஷியர்களுடைய கை உதவியால் வருந்தி எழுந்திருந்து அர்க்யப் பிரதானம் செய்தருளினர்” என்று கூறப்பட்டிருக்கிறது. அன்றியும் ஷெ நூலில் “ அசாஸ்திரீயங்களான ஐதிஹ்யங்களெல்லாம் அனுபாதேயங்கள்” எனவுமருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இத்யாதி காரணங்களையும் “ **யதிராஜவிஜயம்**” முதலிய பிராமாணிக நூல்களின் ஆதாரங்களைக் கொண்டும் ஓர் ஸன்யாஸிக்குறித்தான ஆசாரங்களையே பத்திரிகை பேசுகிறது. கோவில், சத்திரம் முதலிய தருமஸ்தானங்களில் காரியம் பார்த்தால் அடுத்த ஜன்மம் இன்னவிதமாகுமென ஸ்ரீமத்ராமாயணத்தின் உத்தா காண்டம் தெளிவாக தெரிவிப்பதைப் பாரும், அப்பொழுது ஐயம் தீரும்.

பீமண்ணு—நீர் என்ன சொன்னாலும் நான் ஒத்துக்கொள்ளமாட்டேன், நான் பிடிவாதக்காரன். இப்பொழுதுங்கூட அனேக ஸன்யாஸிகளைப் பார்க்கிறேன். அவர்கள் கூட ஆலயவேலை பார்க்கிறார்கள். சூத்திர ஸன்யாஸியிலும் கட்டளைத் தம்பிரானென்று ஓர் துறவியை கோவில் காரியம் பார்க்க எற்படுத்தியிருக்கிறது. இது விசேஷமாய் சிவாலயத்தில்தான் காணப்படுகிறது. மேலும் மடாதிபதிகளல்லாத சில வந்தண ஸன்யாஸிகள்கூட தம் தம்மாலியன்ற மட்டில் நடுவிலோர் கையாளை வைத்து, அவர் மூலமாக தம் தம் ஸ்தானத்தில் சமாராதனை, ஜன்மோத்ஸவம் முதலியவைகளைச் செய்து வருகிறார்கள். இது அனுபவஸித்தம். இப்படிக்கெல்லாமில்லாமல் கேவலம் வேதாந்த விசாரத்திலும் பகவானுடைய தியானத்திலுமே மரம்போலிருந்துவிட்டால், உலகத்தில் என்ன மதிப்புண்டாகும். கீர்த்தி எது, பெருமை எது, இவைகளுக்காகவாவது நாலு பெயர்கள் மெச்சும்படி கோவில், குளம், சத்திரம் முதலிய விடங்களில் பெரிய தனத்தை வஹிக்க வேண்டாமா. இராமானுஜனென்றால் சும்மாவா. முதற்றறமான கெட்டிக்காரரல்லவா. எப்பெயர்ப்பட்ட ஆளையும் மடக்கித் தன் வலையில் சிக்கவைக்கும் வல்லமையுடையவரல்லவா. பெருமை வேண்டுமானல் சாஸ்திரீயமிது, அசாஸ்திரீயமிது என்று பார்த்து ஒதுங்கி ஒதுங்கிப் போனல் கூப கூர்மம் போலாவாரல்லவா. சமயோசிதமாய் நடப்பவர்தான் கெட்டிக்காரனென்றும், மஹா புத்திசாலியென்றும், மஹா வித்துவானென்றும், வாசாலகனென்றும் பெயர் வாங்குவார். நாலு பெயர் வருவார், போவார், பேசுவார், பணம் காசு கொடுப்பார், நாடெங்கும் போய்ப் புகழ்ந்து கொடுத்தார் தந்தாரென பறை அறைவிப்பார். மனுஷி [illegible] எந்த விதத்தாலாவது ஆணைக்கொண்டோ, பெண்ணைக் கொண்டோ, [illegible]களைக்கொண்டோ, விதவைகளைக்கொண்டோ

பெருமையை சம்பாதிக்கவேண்டும். விருதாவாக வேதாந்தம் பார்த்துக்கொண்டு, ஓர் தென்னங்கீத்தோலைகளால் கட்டப்பட்ட ஓலை வீடாகிய பர்ணசாலையில் உட்கார்ந்துகொண்டு, ஓர் டம்பாசாராடம்பரமுமில்லாமலிருந்தார் இராமானுஜாசாரியார், என்று கூறினது அறிவின்மையையே காட்டுகிறது. இவைகட்கெல்லாம் விடைகொடும்.

ராமண்ணா—தோழப்பனே! என்னய்யா இது ஏதாவது மதிப்பிரமம் உண்டாகும்படியான ஔஷதப்பிரயோகம் செய்துவிட்டாயா என்ன? தாறுமாறாய் உளறுகிறாய். வருணாசிரம தருமங்கள், அவைகளை ஒழுங்குபடுத்திப் பேசும் வேதாதிப்பிரமாணங்கள் எல்லாவற்றையும் பாழாக்கி கேவலம் இவ்வுலகின் இன்பத்தையே பேசுகிறாய். நீ நல்ல படிப்பாளியாச்சுதே. அப்படிப்பெல்லாம் மறந்துபோச்சுதா என்ன. முழு நாஸ்திகன்போல் இவ்விதம் பேசத்தொடங்கி எத்தனை நாளாயின. சாஸ்திரவசியராய்ப் பேசும். தன் கொண்டியாய்ப்பேசினால் சாஸ்திர மார்க்கப்படி பேசிப் பழக்கமுள்ள நான் எப்படி மறுமொழி கூறுவது.

பீமண்ணா—அய்யா! அப்படியில்லையுங்காண். ஸ்ரீரங்கம் டவுனில் உள்ள கோவில் கோபுரவாயில்கள், கடைகள், காப்பிக்கடைகள், தேசாந்திரி சாதம் பட்டுவாடா ஆகுமிடங்கள், குருக்களது ஸ்தானங்கள் முதலிய விடங்களிலெல்லாம் நானும் அங்கங்கே போய்ப் பார்த்தேன். எங்கு பார்த்தாலும் இராமானுஜனுக்கு உத்தியோகம் போச்சு, போச்சு என்றே ஒருவரோடொருவர் பேசிக்கொள்ளுகிறார்களய்யா. அவருள் சிலர் நம்முடைய தீர்மானத்தையும் பேசுகின்றனர். என்றாலும் தடிமுண்டப் பேர்வழியின் கக்ஷிதான் தடபிடலாயிருக்கிறது. படிப்பாளியான ஸாத்விகன் வார்த்தை தக்குஸ்தாயியில் ஒளிந்துபோகிறது. இப்படியெல்லாம் ஏன்? பத்திராதிபர் கெட்ட பெயர் வாங்கிக்கொள்ளவேண்டும். அவருக்கு நீராவது புத்தி சொல்லும்.

ராமண்ணா—கலி. ஐயாயிரம் வருஷத்திற்குப் பிற்பட்ட பூர்ண கலிப் பிரவேசத்திற்குப் பிறகு, சாஸ்திரவசியர்களான விப்பிரர்களுக்குக்கூட கலி ஆவேசத்தால் பலவிதமான தடுமாற்றங்கள் உண்டாய்விட்டன. ஆனதுபற்றி ஸாத்விகராயிருக்கவேண்டிய பிராம்மண ஜாதியார்கூட சாஸ்திர வரம்பை மீறிப் பேசுவதும், நடப்பதும், நடத்திவைப்பதுமாய் மோசம் போய்விட்டனர். அரக்கர்களும், அஸுரர்களுந்தான் சிறிது காலங்களாக நல்ல பிராம்மண ஜாதியில் ஜனிக்கிறார். அப்படி ஜனித்து வேதாதிகளையுங்கற்றுணர்ந்து, அப்பிராமணாதி ஜாதி தருமங்களையும், ஆசிரம தருமங்

களையும் தனக்கு இஷ்டமான வழியில் இழுத்திழுத்து ஸாத்விகாசாரங்களை யெல்லாம் பாழாக்கி நடந்தும், நடத்தியும் காட்டுவது போதாமல், முந்திய இராமானுஜன் முதலிய பெரியோர்கும் எங்கள்போலவே நடந்தார் என்ச் சில புத்தகங்களையும் எழுதிவைத்துவிட்டனர். தன் தன் பிறவி முதல் அந்தப் புத்தகங்களையே உபநிடதங்களைப்போல் பாராயணம் செய்து வந்தவர் எவரெவருளரோ, அவரவரெல்லாம் துராசாரங்களையே சதாசாரங் களாகப் பேசுவார். ஸாத்விகர் என்ற தெய்வப் பிறவிகள் சுருக்கமான வராதலால், சத்தர்கள் வார்த்தை சிரமப்பட்டு அங்கீகரிக்கும்படி ஏற்படுகிறது. வங்கக்கற்கள் காடு மலையடிவாரங்களில் பற்பலவுளவாயினும், இரத்தினங்கள் சுருக்கங்களாயினும் இன்னமும் இரத்தினக் கற்களுக்குத்தான் விவேகி ஏற்றம் கூறுவான். இப்படி ஒரு விதம். அறிவின்மையால் சீமைச் சிவப்பு சீயாம் சிவப்பு, பத்மராகம் இம்மூன்றுகளுக்கும் தாரதம்யம் இன்னதென மனதில் அறியக்கூடாமை ஒருவிதம். இப்படி இரண்டுவித மனிதர்கள் உலகில் தற்காலம் காண்கின்றனர். பத்திராதிபர் ஷை தாரதம்மியங்களை யெல்லாம் நன்குணர்ந்தவரும் ஸ்ரீ பகவத் பாஷியகாரரிடம் அந்தரங்க மான பக்தியுடையவரும், அவராலருளிச்செய்யப்பட்ட ஒன்பது ஸ்ரீஸூக் திகளையும் முறைப்படி உணர்ந்தவரும், அதன் வியாக்யானங்களையும்கூட படித்தவரும், பழையகாலத்திய ஜிதேந்திரியர்களான **யதிவரியர்** முதலிய பெரியோரிடம் பணிவிடை மூலமாகப் பழகியவருமாதலால் பிரமாண விருத்தமாயாவது, ஆக்ஷேபத்திற்கு மறுமொழி கூற சக்தியில்லாமலாவது பிரசுரமாக்கமாட்டார். நீரும் யதிதருமங்களை விவரிக்கும் கிரந்தங்களை இனியுமோர்தரம் ஆழ்ந்து பாரும்.

பீமண்ணு—நீர் சொல்வதெல்லாம் சரிதான். இப்படித்தப்புச்செய் யும் ஸன்யாஸிகளுக்கு இந்திரன் சிக்ஷகன். இறந்தபின் அந்த வேஷயதியை செந்நாய்களைக்கொண்டு பிடுங்கவிடுவான். இவையெல்லாம் எனக்கும் தெரியும். இந்த சாஸ்திரங்களில் நம்பிக்கையே இல்லாதவர்களுக்கு எதைக்கொண்டு பதில் சொல்வது.

ராமண்ணு—ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் "**ராக்ஷஸா: கலிமாச்ரித்ய ஜாயந்தே ப்ரஹ்மயோநிஷு**" என்ற சுலோகத்தின்படியும் முன்பின் படியும் இதற்குமுந்தி ஸமாதானம் சொன்னேன். அப்பிரமாணிகர்களுக்கு எப்படிச் சமாதானம் சொல்வது. அப்பொழுது கோவிலிலுள்ள பணம், காசு, நகை, சாதம், பருக்கை முதலியவைகளைச் சோரம் செய்யமாத்திர மெண்ணமுடையவர், உடையவர் அப்படிச் சொன்னர், இப்படி நடந்தார், இரவில் குழம்புப்பாலமுது செய்தார், திருவனந்தபுரத்தம்மை முதலியவர்

களெல்லாம் உடையவருக்கு திருமேனி கைங்கரியம் பண்ணினார்கள். கபடம் செய்தார். வியாஜம் பேசினார் என்று தமது கூட்டத்தில் அட்டஹாஸத்துடன் பேசிக்கொண்டுதானிருப்பார்கள். இப்புண்ய ஜனங்களுக்கு எந்தப் படிப்பாளியும் பதில் கூறமுடியாது.

பீமண்ணா—ஆம், ஆம், ஸ்ரீ ரங்கத்தில் ஓர் துறவியார் வேனிற்காலத்தில் தன் இடத்திற்கு வெளியில் நாற்காலி, சாய்மான நாற்காலி, மெத்தை, திண்டு இவைகளை உபயோகித்துவருகிறார். என் கண்ணாலேயே பார்த்தேன். ஸ்னானம் செய்கையில் திருதண்டணத்தையும் காணோம், ஏக தண்டத்தையும் காணோம், பலீவர்த்தமென்ற பிராணிக்கு ஹிம்சையுண்டு பண்ணக்கூடிய சகடத்தில் திண்டோடுகூடிப்போய் மடங்கி வருகிறார். சூத்திரனோடுகூட அன்வாரம்ப தோஷத்தைக்கூடக் கவனியாமல் அவனை சகட ஸாரதியாக்கிக்கொண்டு பயமில்லாமல் ஸஞ்சரிக்கிறார். இவையெல்லாம் யதிக்குறிய தருமங்களாகுமா. பரலோக ஞாபகமேயில்லாத துறவியெனத் தோன்றுகிறது. இவ்வளவு போதும். என் மனதிற்கும் திருப்தி ஆய்விட்டது. மேலேதாவதுண்டானால் சொல்லும் நாழிகை ஆச்சுது.

ராமண்ணா—"காயான்னஸ்தலசுத்திக்கு" விவரம் கூறப்பட்டவர்கள், ஸ்ரீ ராமானுஜனுக்கு ஏன்? விருத்தாசாரங்களைக் கற்பிக்கமாட்டார்கள். சேஷாவதாரமா அல்லவா, உடையவர் என்ற பெயருண்டா இல்லையா, தமிழில் நூல்களைச் செய்ய விருப்பமுள்ளவரா அல்லவா இவை முதலிய விஷயங்களெல்லாம் ஸம்பிரதாய நூல்களைப் பற்றியவை. ஸம்பிரதாயமென்றது இராமானுஜ மதத்தில் பற்பல விதம். இவைகளைப்பற்றி பேச வந்த பத்திரிகையல்ல இது. ஆனால் ஸ்ரீ ரங்கம் கோயிலில் வடகலையார்க்கு அனேகம் மிராசு பாத்தியமும் அனுபவங்களுமிருக்க, அவற்றை மறைத்துக் கூற வந்த "கோவில் ஸம்பிரதாய தீபிகை" என்று பிரமோதூத-௵ கார்த்திகை-௴ தொடங்கி வெளியில் வந்த மாதாந்த பத்திரிகையிலுள்ள விஷயங்களில் அயதார்த்தமின்னது, யதார்த்தமின்னது, என்று எல்லோருக்குமெடுத்துக்காட்ட வந்த பத்திரிகையிது. ஆகையாலேயே இப்பத்திரிகைக்கு "யதார்த்தவாதினீ" என்ற பெயர். மற்ற ஸம்பிரதாய விஷயங்களுக்கெல்லாம் ஸமயம் வரும்பொழுது மறுமொழி கூறப்படும்.

பீமண்ணா—சரி, சரி, எனக்கும் நாழிகையாச்சுது. பின்பு பேசிக்கொள்வோம் போய்வருகிறேன், விடை தாரும். (இனி வரும்)

(1-வது ஸஞ்சிகையின் 16-வது பக்கத்திற்குமேல் தொடர்ச்சி)

அர்ச்சகம்.

இப்படிப்பட்ட ஆராதகர்களாகிற ஆசாரியர்கள் ஸ்ரீரங்கம் கோவிலுக்குள், ஸ்ரீரங்கநாதனுக்கு நித்தியப்படி நடக்கவேண்டிய உபசார வடிவமான காரியங்களுக்கும், விசேஷப் படிகளான காரியங்களுக்கும், இவ்விதம்தான் பகவத் சாஸ்திரப்படி நடத்தவேண்டுமென்று சிப்பந்திகளை நியமிக்க வேண்டியவர்களாயும், அவ்விதமே அந்தந்த சிப்பந்திகளைக்கொண்டு தாம் பகவத் காரியத்தை நடத்தவேண்டியவர்களாயுமிருக்கிறபடியால், இவ்வர்ச்சகர்களை ஷெ பகவத் சாஸ்திரங்கள் ஆசாரியர்களென்றும், தேசிகர்களென்றும் அருளிச்செய்கின்றன. பகவத் வமிசியர்களாய், பகவத் காரிய காரிகளாய், பகவானுக்குச் செய்யவேண்டிய காரியங்களுக்குப் பிரதிநிதிகளாய் பகவான் தாமே செய்துகொள்ளவேண்டிய காரியங்களை அந்த ஸ்தானத்தில் இவ்வாசாரியர்களே ஜங்கம வடிவர்களாயிருந்து நடத்திவருகையால் இவ்வாராதகர்களாகும் ஆசாரியர்களை பகவத் சாஸ்திரம் மஹா பாகவதர்களென்று கூறுகிறது. இம்மஹா பாகவதர்கள் பெருமையை ஸ்ரீமத் வேதாந்த தேசிகனுர் தமது ஸ்ரீஸூக்தியில் "திருப்பிரதிஷ்டையில் மஹா பாகவத கரஸ்பரிசம் போல்" என்றருளினுர். ஆகமப்பிராமாண்யத்திலும் காண்கலாம்.

மேலும்; பெரியபெருமாளுக்காக இவ்வர்ச்சகர்கள் ஷெ பெருமாளைத் தொட்டு எடுத்தெழுந்தருளப்பண்ணி எந்தெந்த ஸ்தானங்களில் எப்படியெப்படி உபசரிக்க வேண்டுமோ, அப்படியெல்லாம் உபசரித்து பெருமாளுடைய ஸ்தானத்தில் பெருமாளுக்கே உறித்தான பகவதாகமப்படி ஒவ்வோர் காரியத்தையும், பிராணுயாமம் முதல் பிரதி ஸரபந்தனம் நடுவாய் காரியம் முடிவாகிறவரையில் சகல காரியங்களையும் பெருமாள்போல் செய்துவருகிறபடியால், ஆராதகர்கள் செய்யும், கோவில் பெருமாள் காரியங்களெல்லாம் பெருமாள் தாமே செய்தருளுவதுபோல் சாஸ்திரப்படி ஆயின. இதைப்பற்றி பகவத் சாஸ்திரங்கள், பகவான் இரண்டுவிதமென்றும், அவற்றுள் ஸ்தாவரமொன்று, ஜங்கமமொன்றென்றும், ஸ்தாவரமாவது பிம்பவடிவமானதென்றும், ஜங்கமமாவது அர்ச்சக வடிவமானதென்றும் வெளிப்படையாய்த் தெரிவித்தன. சிலவிடங்களில், "அர்ச்சகர் நேரிட ஸ்ரீ ஹரியாகிருர், இவரே மேன்மையான தேவன்" என்றும் தெளிவிக்கின்றன.

அன்றியும்; எவ்வளவு தூரம் வேதமோதியவரானாலும், சாஸ்திரம் படித்தவரானாலும், இரஹஸ்யங்களென்ற மத நூற்களைக் கற்றவரானாலும், மஹாமஹோபாத்தியர்களாயிருந்தாலும், ஆசாரிய புருஷர்களானாலும் மஹா மடாதிபதிகளானாலும், விரக்தர்களான ஸ்ரீ வைஷ்ணவ ஸன்யாஸிகளானாலும், வர்ணாசிரம சாஸ்திரப்படி வழுவாமல் நடக்கும் இல்லறத்தோரானாலும், பெருமாளை கோயிலிற் போய் தமதெல்லையில் தூரமாக நின்றுகொண்டு தொழுது வழிபடுவதானல், ஷை மஹா பாகவதர்களான அர்ச்சகர்கள் கையிலிருந்தே தீர்த்தம், சடகோபமென்ற திருவடிநிலை, துழாய் முதலிய பிரஸாதங்களைப் பெற்றாலொழிய, வேறு எவர் கையாலாவது பெற்றால் ஷை தீர்த்தம் தீர்த்தமாகாது என்று சாஸ்திரம் கூறுவதோடு, மற்றவர் கைகளினின்று வாங்கும் பகவானுடைய தீர்த்தம் ஸுரை என்ற கள்ளுக்கு ஸமமென்றும் அப்பானம், ஸுராபானஸமமென்றும் சாஸ்திரம் கூறுதலால் ஷை பஞ்சகோத்திரிகளான அர்ச்சகர்கள் பகவத் சாஸ்திரப்படி கோயில் பெருமாள் விஷயத்தில் எவ்வளவு மேன்மையை உடையவர்களென்று ஸஹிருதயனும், ஸம புத்தியுமான ஒவ்வொரு சாஸ்திரவசியனும் நன்றாய்த்தெளிந்து, இனியாவது அர்ச்சகர்களை கோயில் பெருமாள் ஸம்பந்தமான எக்காரியத்திலும் ஸாமானியராக நினைக்காதிருக்கக் கடவர்.

வாயால் க்ஷணமாத்திரத்திற்குள் மேன்மையுள்ளதைத் தாழ்மையுள்ளதாகப்பேசிவிடலாமே யொழிய சாஸ்திரங்களிற்கூறும் பிரமாணங்களுக்குச் சரியாக ஒத்துவரும்படி ஓர் வித்துவான்கள் நிறைந்த சபையில் பேசவும், வித்துவான்கள் சம்மதிக்கவும் தாம் நடக்கவும் மற்றவரை நடத்திவைக்கவும், எவரும் வணங்கியமனதுடைய வராகமாட்டார். இக்காலத்தில் தன் கொண்டியாய் தன்னிஷ்டப்படி நல்லவைகளையும், நல்லோரையும் தூஷிப்பதும், பரிஹஸிப்பதுமே பல பெயர்கள் தொழிலாக ஏற்பட்டுவிட்டது. உள்ளதை உள்ளபடியே நினைப்பவரும் நடப்பவரும் வெகு அருமையாய்க் காணப்படுகின்றனர்.

(கலா, என்றாலென்ன?)

"ஆவீறையும்" என்ற பிரமாணப்படி கலா என்றது தமிழில்கலை எனத்திரிந்தது. "ஏகயாபிகலயாவிசுத்தயா." என்ற ஸங்கல்பஸூரியோதயப்பிரகாரம் கலை என்றது ஓர் பாஷை எனப்பொருளாயிற்று. அல்லது ஓர் வித்தையெனக்கருத்தாகிறது. "வடகலை தென்கலைவடுகு கன்னடம்" என்ற செய்யுள்படி வடகலை என்றது, ஸம்ஸ்கிருதபாஷை

யென்றும், தென்கலை என்றது தமிழ் பாஷையென்றும் தீர்மானமாகிறது. இவ்விஷயத்தில் "செந்தமிழும் வடகலையும் திகழ்ந்தநாவர்" என்று திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்த தேரழுந்தூர் ஆமுருவியப்பன் விஷயமான பாசுரமும் ஆதரிக்கின்றது. ஆக இவ்வளவால் வடகலை யென்பது வடமொழி என்றும், வடகலையார் என்றால் ஸம்ஸ்கிருதமான தேவபாஷையைக்கற்றுணர்ந்தவர் என்றும், தென்கலை யென்பது தென்மொழி என்றும், தென்கலையார் என்றால் உச்சாரணஸௌகரியம் கூடக்குறைந்த பிராகிருதபாஷையைக்கற்றுணர்ந்தவர் என்றும் தாற்பரியமாயிற்று. இப்படி பெயருக்கு மாத்திரம் ஆயிற்றே ஒழிய இரண்டு பெயர்களிலும் இரண்டும் கற்றவர்களுண்டு. ஸம்பிரதாயப்படி நிருபமெழுதுங்காலெல்லாம், ஸ்ரீ உப. வே. என்றே மரியாதை வைத்தெழுதுகின்றனர். இதன் கருத்தாவது; உபய வேதாந்தங்களிலும் பாண்டித்யம், பிரவசனமிவைகளையுடையவரென்பது. இப்படியாகிறபடியால் எவரை வடகலையார் என்றே, எவரைத் தென்கலையாரென்றே ஏகபக்ஷமாய்ப்பேசுவது. கலை என்ற சொல்லை ஓர் பாகமென்று பொருள்கொண்டால் வடபாகம், தென்பாகம் என்றாகிறது. அப்பொழுது வடபாகத்தார், தென்பாகத்தார் எனக்கருத்தாகிறது. வடகலையார், தென்கலையார் என்பதை வடகரையார், தென்கரையார் என்றும் கொள்ளலாம். அப்பொழுது எங்களாழ்வான் பாரம்பரை என்றும், நம்பிள்ளை பாரம்பரை என்றும் கருத்து. அதாவது வட திருக்காவேரிக்கு வடகரையிலுள்ள திருவெள்ளறை திவியதேசத்திலிருந்து நடாதூர் அம்மாள் வழியாக ஸ்ரீ பாஷியம், ஆராயிரப்படி என்ற உபயவேதாந்தங்களையும் பிரவசனம் செய்தருளிக்கொண்டிருந்த எங்களாழ்வானென்கிற ஸ்ரீ விஷ்ணு சித்தாசாரியருடைய சிஷ்ய பாரம்பரை என்றும், வடதிருக்காவேரிக்குத் தென்கரையிலுள்ள ஸ்ரீ ரங்கம் திவிய தேசத்திலிருந்துகொண்டு வடக்குத்திருவீதிப்பிள்ளை என்ற ஸ்ரீ கிருஷ்ணபாதாசாரியர், பெரிய வாச்சான்பிள்ளை முதலியவர் வழியாக, நஞ்ஜீயர்படி முப்பத்தி ஆராயிரப்படி என்ற தமிழ் வேதாந்தத்தை மாத்திரம் பிரவசனம் செய்தருளிக்கொண்டிருந்த நம்பிள்ளையின் சிஷ்ய பாரம்பரை என்றும் தாற்பரியம். இவற்றுள் ஓர் விசேஷம். அதாவது நம்பிள்ளை, ஆசாரிய பீடாதிபதியல்லாத வரும், ஸாமான்யமான புரச்சூடஜாதிய வருமாம். ஸ்ரீ விஷ்ணு சித்தாசாரியரோ, ஆசாரிய பீடாதிபதியும் பாரம்பரையாய் ஆதிகாலந்தொடங்கிபழுப்பில்லாது வரும் ஸ்ரீ வைஷ்ணவ குலத்தில் அவதரித்தவரும், ஸ்ரீ பாஷியகாரர் நேரில், திருக்குருகைப்பிரானிடம் ஸ்ரீ பாஷ்யாதிகால க்ஷேபம் செய்தருளியவரும், ஸ்ரீ பாஷ்யகாராலேயே "எங்களாழ்வான்" என்ற திருநாமமிடப்பெற்றவரும் ஸ்ரீ பாஷியகாருக்கு மாசாரியரான புரச்சூடவமி சத்தியவருமாம்.

இவ்விதமேற் படுகையால் தென்கலை பரம்பரையோ ஸ்ரீ பாஷியகாராருக்கு அபிமதமாயுள்ளது, வடகலை பரம்பரையோ ஸ்ரீ பாஷியகாராருக்கு அபிமதமாயுள்ள தெனபகுத்தறிவாளவர் தேறக்கடவர். அன்றியுமிதிலோர் விசேஷம். அதாவது திருமலை நம்பிகள், எம்பார், ஸ்ரீ பட்டர், கர்னுடகப் பிராம்மணரான புதுவைஷ்ணவங்கொண்ட நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, திருவாய்மொழிப்பிள்ளை, ஸ்ரீ மணவாளமாமுனிவர் என்ற தென்கலை பரம்பரையில் பகவத்ராமானுஜன் ஸம்பந்தமே கிடையாது. ஸ்ரீ பாஷ்யகாரர், பிள்ளான், எங்களாழ்வான், நடாதூரம்மாள், கிடாம்பி ஆச்சான், ஸ்ரீ வேதாந்ததேசிகர் என்ற வடகலை பாம்பரையில் ஸ்ரீ பகவத் ராமானுஜன் திருவடிஸம்பந்தம் ஸ்பஷ்டமாகிறது.

ஸ்ரீ அஹோபிலமடத்துப் பரம்பரையோ எனில், ஸ்ரீ ஆதிவண்சட கோப யதீந்திரமஹாதேசிகன் கிடாம்பியார் திருவமிசியராதலால், ஆதி கிடாம்பியாச்சானுக்கு ஸ்ரீ பாஷியகாரர் திருவடி ஸம்பந்தமுள்ளதுகொண்டு இராமானுஜஸம்பந்தம் ஸித்தமாயிற்று. இது போலவே ஸ்ரீ வேதாந்த தேசிகன் திருவடி ஸம்பந்தமுள்ள ஸ்ரீ பிர்ஹ்மதந்திர யதீந்திர மஹாதேசிகனுக்கு சிஷ்யரான ஸ்ரீ மத்பரகால யதீந்திரரால் பெருக்கப்பட்ட ஸ்ரீ பரகாலமடமும் ராமானுஜஸம் பந்தமுள்ளதாயிற்று. ஆசாரிய புருஷர்களுக்கெல்லாம் இராமானுஜஸம்பந்தம் நிச்சயமாய்க்கூறயாதொரு ஸம்சயமுமில்லை. ஆகவே ஸ்ரீ வானமாமலை மடந்தான் இராமானுஜ ஸம்பந்தத்தைப்போலியாகயுடையதாக ஏற்பட்டது. அதாவது மந்திரமந்திரார்த்தத்தில் இராமானுஜஸம்பந்தமே இல்லாதது என்றகருத்து.

ஸ்ரீ இராமானுஜாசாரியராகிய பாஷியகாரரின் முதல் சிஷியராகிய திருக்குருகைப்பிரான் பிள்ளான், திரவிடோபநிஷத்திற்கு ஆசாரியாக்ஞையை அனுஸரித்தத்திரவிட பாஷியகாரராயினர். இதற்கு முன் திருவாய் மொழிக்குயாதொரு வியாக்கியானமுமில்லை. இதன் வியாக்கியானம் இருபத்திஞலாயிரப்படி. ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்ததிரவிடோபநிஷத்ஸாரம், தாத்பரியரத்னவளி என்ற திவியப்பிர பந்தவியாக்கியானஸார ஸ்ரீ ஸூக்திகளை அனுசரித்து ஸ்ரீ பரகாலஸ்வாமியால் அருளிச்செய்யப்பட்டது பதினெண்ணுயிரப்படி. தசோபநிஷத்து பாஷ்யம் ஸ்ரீ ரங்காராமானுஜஸ்வாமி அருளிச்செய்தது ஒன்பதிஞயிரப்படி. இப்படி அனேகம் கிரந்தங்கள் திருவாய்மொழிக்கு வியாக்கியானங்களாயிருக்க வடகலையாருக்குத் தமிழ் பாஷையில் பாண்டித்தியமும், சிரத்தையும் போதாதென நமது அரிய நண்பர் எவ்விதம் கூறினுரோ தெரியவில்லை. ஒரு ஸமயம் இவருக்கு வைஷ்ணவத்வம் இன்னம் மூக்காமலும், ஸ்மார்த்தஸம்பந்தம் விடாமலு

மிருக்கிறபடியால் தெளிவு போதாதெழுதியிருக்கலாமென தோன்றுகிறது. இடையிலிருந்து எழுதிவைப்பவராவது சரிவரக்கூறக்கூடாதா. தென்கலையாவது, வடகலையாவது என்ன பேதமுள்ளதென ஆலோசிக்குங்கால் இருவருள் ஒருவரை யொருவர்கண்டால் பரஸ்பரம் இராமானுஜ ஸம்பந்தமுள்ளதுகொண்டு, அடியேன், ஸ்வாமி, எழுந்தருளவேணும், விடைகொள்ளுகிறேன், திருமாளிகை, அமுதுசெய்வது இத்யாதி ஸம்பிரதாய மரியாதைச் சொற்களை உபயோகித்துக்கொள்ளுகிறார்களேயொழிய வாருங்கள், போங்கள் இத்யாதி சொற்களை உபயோகிப்பதில்லை, நமது அரிய நண்பர், அவர் வகுப்பினர் இவர்களை கண்டாலோ, இன்னமும் தென்கலையார்கூட, "எழுந்தருளுக" என்று சொல்வதில்லை. இதனால் இன்னமும் கூட வைஷ்ணவத்வம் ஸித்திக் கில்லையென தோன்றுகிறது.

இது மாத்திரமா!! தென்கலையாரும், வடகலையாரும் விவாஹாதிகளையும் செய்து கொள்ளுகிறார்கள். சிராத்தத்தில் நிமந்திரணம் செய்து கொள்ளுகிறார்கள். இப்படி யெல்லாமிருக்க இவ்விருவரும் வடகலைகெட்டது, தென்கலை கெட்டது என்று இடையில் வந்த ஒருவரைத்தூக்கிவிட்டு பிரசுரம் செய்யச்சொல்வது மிகவும் பரிஹஸிக்கத்தக்கது. ஸாரணன் ராமதாஸ வேஷங்கொண்டாலும் ராக்ஷஸபக்ஷபாதம் போகாதேயிருந்தது போல்; நமது நண்பர் வைஷ்ணவ வேஷங்கொண்டாலும், ஸ்மார்த்தமதாபிமானம் விடாது ஸ்ரீ வைஷ்ணவர்களை தூஷிக்கிறகாரியம் விடவில்லை. ஸரியான ஸ்ரீ வைஷ்ணவன் **"பரிஹரமது ஸூதனப்பிரபன்னன்"** என்ற பிரமாணாதிகளுக்குப்பயந்து மற்றோர் ஸ்ரீ வைஷ்ணவனை தூஷிக்கமாட்டான். மிகவுமஞ்சுவான். நமது அரிய நண்பருக்கு ஸ்ரீ வைஷ்ணவஸம்பந்தமில்லாததால்வாய்கூசாது தூஷிக்கிறார். இதைப்பற்றிய விபரங்களெல்லாம் நமது "ஸ்ரீ தத்வநிர்ணயம்" என்ற கிரந்தத்தில் தெளிவாய்க் கண்டு கொள்ளலாம். ஆக இவ்வளவால் **"நாச்சாதயதிகௌபீனம்"** முதலிய நியாயவிவரணசுலோகங்களுக்கு விஷயராகாது, பிராமாணிகராக எதையும் பிரசுரம் செய்வது ஸர்வஜன ஸம்மதமாகுமென வெளியிடப்பட்டது. ஸாத்விக தேவதையான ஸ்ரீ மன்நாராயணனை உபாஸிக்கும் ஸாத்விகர், மற்றோர் ஸ்ரீ வைஷ்ணவனையாவது, ஸ்ரீ வைஷ்ணவஸித்தாந்தா சாரியனையாவது தூஷித்தால் தனக்குள்ள ஸாத்விகத்துவம் பஞ்சாய்ப்பறந்து போவதுமல்லாமல், எம்பெருமானுடைய சீற்றத்திற்கும் பாத்திரமாகும்படி நேரிடும். இது வரையில் ஸாத்விகமாய் மறுமொழிகூறினோம். இனிமேலும் தூஷணை செய்தால் ஒவ்வொரு ஸம்பிரதாயங்களிலுமுள்ள ஊழல்களையெல்லாம் மத்தியஸ்தர்களான சாஸ்திரவசியர்கள் பார்த்துப்பரிஹஸிக்கும்படி எழுத நமக்கும் சக்தியுண்டென அறியக்கடவர்.

அர்ச்சகர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மற்ற ஸ்ரீவைஷ்ணவர்களோடு விவாஹாதி ஸம்பந்தமுண்டென்பது.

ஸ்ரீ ரங்கக்ஷேத்திரத்திலுள்ள அர்ச்சகர்களுக்கு ஸ்ரீ வைஷ்ணவத்துவம் ஸம்பூர்ணமாயிருப்பதோடு கோவில் திருவாராதன யோக்யதையும் பூர்ணமாயிருப்பதால், எல்லா சாஸ்திரங்களிலும் வல்லவர்களுக்கு ஏற்படும் "பட்டர்" என்ற திருநாமம் அனுதியாய் ஏற்பட்டிருக்கிறது. ஆதலால் இரகுநாதபட்டர், தேவராஜ பட்டர், நரசிம்ம பட்டர், ஸ்ரீநிவாஸ பட்டர், ஸ்ரீ கிருஷ்ண பட்டர், முதலாகிய திருநாமங்கள் ஏற்பட்டிருந்தன. இவை போலவே இப்பொழுதும் "பட்டர்" என்ற பிருதோடுதான் வழங்கப்படுகிறது. சில ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு மிசிரர் என்ற பட்டம். சிலருக்கு ஆசாரியர் என்ற பட்டம். சிலருக்கு தேசிகர் என்று பட்டம், சிலருக்கு அய்யங்கார் என்ற பட்டம். இப்படியாக ஸாமான்யரான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு எப்படி பற்பல பட்டப்பெயர்களிடப்பட்டிருக்கின்றனவோ, அப்படியே அர்ச்சகர்களுக்கும் பட்டர் என்ற பட்டப்பெயர் அனுதிகாலமாக ஏற்பட்டிருப்பதாய்த் தெரியவருகிறது. அவர்களாகிறார் = ஸ்ரீவத்ஸாங்கமிசிரர், ஸ்ரீராமமிசிரர், பஞ்சமத பஞ்சனம் தாதாசாரியர், இலக்ஷ்மீகுமார தாத தேசிகன், சிங்கமய்யங்கார் என்பவர்கள். அய்யர் என்ற சொல், தெலுங்கில் "அய்யகாரு" என வெகு வசனச் சொல்லாகும். அய்யகாரு என்பது ஸானு நாஸிகமாகவும் தெலுங்கு வியாகரணப்படி ஆகுமாதலால் அய்யங்காரென்றும், ஸ்திரீகளை அம்மங்காரென்றும் ஸ்ரீ வைஷ்ணவ வகுப்பில் அழைப்புச் சொற்களாக வழங்கி வருகின்றன. ஸம்ஸ்கிருத பாஷையில் "ஆர்ய:" என்றிருந்து பிராகிருதத்தில் "அய்ய" எனமுதலில் மாறியது. எல்லா பிராம்மணர்களுக்கும் மொத்தமாய்க் கூட்டவேண்டிய பட்டப்பெயர் "சர்மா" என்பது. இது தரும சாஸ்திர விஹிதம். மற்றவையெல்லாம் அப்பொழுதப்பொழுது நவீனமாய் ஏற்படும் பட்டப்பெயர்கள். இவற்றுள் சிலகாரணப் பெயர், சில இடுகுறிப்பெயர். இப்படியிருக்க தத்வமறியாது பட்டப்பெயர் மாற்றத்தைக்கொண்டு வேறு வேறு வகுப்பினராகப் பிதற்றுகின்றனர். ஆதலால் பிராம்மணரில் ஸ்ரீவைஷ்ணவர்களென்றால் ஒரே வகுப்பினரேயொழிய வெவ்வேறு வகுப்பினரல்ல.

ஆனதுபற்றியே ஸ்ரீரங்கம் அர்ச்சகர்கள் பண்டு பண்டாக ஸாமான்ய ஸ்ரீவைஷ்ணவர்களோடு விவாஹாதி ஸம்பந்தம், போஜனப்பிரதிபோஜனமிவைகளை அனுஷ்டித்து வந்திருக்கிறார்கள். இவ்விஷயத்தைப்பற்றி

இதற்கு 38-வருஷங்களுக்கு முந்தியே 1893 வருஷ அஸல் 150-வது நம்பரில் ஸ்ரீரங்கம் ஜில்லா முன்ஸீப் கோர்ட்டில் பெரிய தேவராஜபட்டர் முதலிய அர்ச்சகர்கள் எழுதிவைத்திருக்கிற ஸாக்ஷி வாக்குமூலங்களுக்குச் சரியான பகர்ப்பு (நகல்) வருமாறு காட்டப்படுவதாவது :— "பிராம்மணஜாதி" ஸ்ரீரங்கம் கோவில் அர்ச்சகத்தொழில், 59 வயது, விஷ்ணு மதம், ஸ்ரீரங்கத்திலிருக்கும் தேவராஜபட்டர் எழுதிவைத்ததாவது ;—அர்ச்சகவேலைக்கு என்னை ஒருவரும் நியமிக்கவில்லை. தருமகர்த்தாக்கள் ஸன்னது முதலியன கொடுக்கிற வழக்கமில்லை. எனக்குத் தகுந்த வயசு வந்தபொழுது, என் தகப்பனார் வருதிப்படி நான் அர்ச்சகவேலை பார்க்க ஆரம்பித்தேன். ஷை வேலை எனக்குக் காணியாக்ஷி. அர்ச்சகர்களுக்கு ஷை கோவில் பரிசாரகமும் காணியாக்ஷிதான். எனக்கு இரண்டு அலுவல்களும் பாரம்பரையாக பாத்தியமுள்ளவை. அப்படியேதான் எல்லா அர்ச்சகர்களுக்கும் இரண்டு அலுவல்களும் பாத்தியப்பட்டவை. அர்ச்சகர்கள் தாங்களே பரிசாரக அலுவலையும் பார்க்கமுடியாது. அர்ச்சகர்கள் பூஜை செய்யும்பொழுது பரிசாரகர் மணி அடிக்கிறதும், தூபம் முதலியவை எடுத்துக்கொடுக்க வேண்டியதும் உண்டு. ஒரே சமயத்தில் பூஜை செய்கிற அர்ச்சகர், தானே மணி அடிக்கவும் தூபம் முதலியன எடுக்கவும் கூடாமையால், அர்ச்சகர்கள் வேறு ஆட்களைக்கொண்டு பரிசாரகத்தை நடப்பிவித்துக் கொள்ளுகிற வழக்கம். ஸ்ரீரங்கம் கோவில் அர்ச்சகம் என்பதில், ஸ்ரீரங்கநாயகர் கோவில், சக்கிரத்தாழ்வார் கோவில், நாச்சியார் கோவில், சிங்கர் கோவில், உறையூர் நாச்சியார் கோவில், இவ்வளவிலும், அர்ச்சகம் என்பது அர்த்தம். பரிசாரகத்திற்காக கோவில் தருமகர்த்தாக்கள், யாரையும் நியமிக்கிறதில்லை. மேற்சொல்லிய கோவில்களில் பரிசாரகத்திற்கு ஆட்களை அர்ச்சகர்கள் தான் நியமிக்கிறது. அம்மன் கோவில் பரிசாரகம், அர்ச்சகர்கள் நியமிக்கிறதில்லை. கோவிலார் நியமிக்கிறது. சிங்கர் கோவிலில் ஸ்தானீக பாத்தியமும் உண்டு. அர்ச்சகர்கள் குடும்பத்திற்குள் தான் ஒருவருக்கொருவர் விவாஹம் நடத்திக்கொள்ளவேணுமென்ற ஏற்பாடில்லை. என் தாயாரும், என் பாரியையும் கோவில் பூஜையில்லாதவர்களுடைய புத்திரிகள்தான். என் தம்பி பாரியாளும் அப்படியே. அர்ச்சகம் கோபாலஸாமிபட்டர், ஸ்ரீநிவாஸராகவ பட்டர், இராமசுவாமி பட்டர் இவர்களுடையவும், குப்பா பட்டருடையவும் பாரியைகளும் பூஜைபண்ணுதவர்களுடைய புத்திரிகள்தான். பரம்பரையாய் பூஜை செய்வதால் எங்களுக்குப் பட்டர் என்று பெயர். மற்றவருக்குப் பூஜையில்லாததால் அந்தப் பெயரில்லை. எங்களுக்குள் வேறு வித்தியாஸம் கிடையாது. குப்பா பட்டர் புத்திரிகளை பூஜைசெய்யாத இன்ஸ்பெக்டருக்கும், காஞ்சீபுரத்தில்

வெங்கடாசாரியார் புத்திரருக்கும் கொடுத்திருக்கிறது. கோவில் பூட்டுத் திறவுகோல் வைத்துக்கொண்டிருக்கவேண்டியது அர்ச்சகர்களைச் சேர்ந்தது. எங்களுக்காக பரிசாரகர்கள் வைத்துக்கொள்ளுகிறதுமுண்டு. பரம்பரையாய் அர்ச்சகர்களிடமே இருந்துவருகிறது. மானேஜர்களிடம் ஒருநாளும் இருந்துவந்தது கிடையாது. ஆகம சாஸ்திரங்களை யனுசரித்து ஸ்ரீபாஞ்சராத்திர தரும சாஸ்திரப்படி கோவிலில் பூஜைகள் நடத்தப்படுகிறது. கோவிலில் நடக்கவேண்டிய பிராயச்சித்தம் முதலிய வைதிக விதிகளை மானேஜர்களுக்குச் சொல்லவேண்டியது அர்ச்சகர்கள் தான். அர்ச்சகர்கள் தாங்களே தீர்த்தம் எடுத்துக்கொள்ளுகிறது. யானை ஏறுகிறது மாலை போட்டுக்கொள்ளுகிறது, கோஷ்டியில் முதல் தீர்த்தம் பெற்றுக்கொள்ளுகிறது, பரிவட்டம் கட்டிக்கொள்ளுகிறது, இத்யாதி மரியாதைகள் அர்ச்சகர்களுக்குண்டு. இந்த மரியாதைகள் விலைமதிக்கத்தக்கவையல்ல. பெருமாள் ஸன்னிதியில் பண்டாரிகள் முன்பு இருந்தார்கள். இப்பால் எனக்கு அறியாத காலம் முதல் தள்ளுபடியாய் போய்விட்டது. பெருமாள் சன்னிதியில் பண்டாரிகள் பரிசாரகம் செய்தது கிடையாது. பெருமாள் சன்னிதியில் பண்டாரி வேலையை கொல்லநாயக்கர் இரண்டு பெயரும், ஸ்தானிகர்களில் சிலரும், அர்ச்சகர்களில் சிலரும் பார்த்து வருகிறார்கள். மானேஜரும் அர்ச்சகர்களும் ஒருவருக்கொருவர் ஒத்து நடக்கவேண்டியது. காரியங்கள் தாமஸப்பட்டுப்போனால் ஸ்வதந்திரத்தில் பிடிப்பதுண்டு. சஸ்பெண்டு செய்கிறது கிடையாது. வெளியில் என்னை நிறுத்திவைத்ததற்காக மானேஜருக்கு மாஜிஸ்டிரேட்டரால் 2 ரூ. அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. 2-வது ஸ்ரீகிருஷ்ணபட்டர் கூறுகிறார்:— அர்ச்சகர்களும், அர்ச்சகமில்லாத அய்யங்கார்களும் ஒருவருக்கொருவர் கொண்டு கொடுத்து வித்தியாஸமில்லாமலிருக்கிறோம். எனக்கு திருவெவ்வளூரில் அர்ச்சகம்செய்யாதவர் மகளை விவாஹமாய் 20 ௵ ஆச்சுது என் தமயனுமப்படியே திருப்பாதிரிப்புலியூரில், அர்ச்சகம் செய்யாதவர் மகளை விவாஹம் செய்து 40 ௵ ஆகிறது. ஸ்ரீரங்காபட்டர் மகன் கோபாலசுவாமி பட்டர் நீடாமங்கலம் இராகவைய்யங்கார் மகளையும், இராமசுவாமி பட்டர் கும்பகோணம் அய்யங்கார் மகளையும் விவாஹம் செய்திருக்கிறார்கள். பூஜை செய்யாத அய்யங்கார்கள் எங்கள் வீடுகளிலும் நாங்கள் அவர்கள் வீடுகளிலும் சாப்பிடுகிறதுண்டு.'' ஆக இவ்வளவால் ஸ்ரீரங்கம் அர்ச்சகர்களெல்லாம், அவர்களுக்குப்புறமேயுள்ள ஸத்ஸம்பிரதாய ஸ்ரீ வைஷ்ணவர்களோடு ஸம்பந்தம் வெகு காலமாய் நடத்தி வருகிறார்களென்பது தெளிவாயிற்று. [illegible] ஸ்வீகாரம் செய்துகொள்வதாயிருந்தாலும், வருகிற பையன்கள் வடகலையார் ஸம்பிரதாயஸ்தனாக இருக்கவேண்டு

மெனவும் காண்கிறது. ஏனெனில்; பெரிய தேவராஜ பட்டர், இராகவன் என்ற ஓர் பையனை ஸ்வீகாரம் செய்துகொண்டார். இவன் மைத்துனி மகன். பிறவியால் தென்கலையார்வீட்டுப் பையன். என்றாலும்; பட்டர் ஸ்வீகாரம் செய்துகொண்டபிறகு வடகலையார் திருமண்காப்பையும், வடகலை ஸம்பிரதாயத்தையும் அனுஸரித்து நடந்துவந்தானேயொழிய பழைய சூலபுண்டிரதாரணத்தையாவது, அசாஸ்திரீயதுரானுஷ்டானத்தையாவது, கையாடவில்லை. இப்பையன் விவாஹத்திற்குப்பிறகு கோவிலில் அர்ச்சக கைங்கரியத்தைச் சிலகாலம் நடத்திவந்தான். பிறகு பரலோகஞ் சென்றான். இவனது மனைவியார் இன்னுமிருக்கிறாள். இவ்வம்மையார் வடகலையார் வீட்டு விதவைபோல் விகேசினியாயிருக்கிறாளேயொழிய ஸகேசியாயிருக்கவில்லை. ஆனதுபற்றி அர்ச்சகர்களெல்லாம் ஸநாதானமாய் பாதாகிருதியான வடகலையார் திருமண் காப்புபோன்ற புண்டிரங்களையுடையர்களும், வடகலையார் நடந்துவரும் ஸதாசாரங்களையுடைவர்களுமானவர்கள் என்றும், அடியோடு தென்கலை ஸம்பந்தமேயில்லாதவர்களென்றும், ஸத்ஸம்பிரதாயிகளான வடகலையார்களுடைய ஸதாசாரங்களையுடையவர்களென்றும், உருத்திரசூலம்போன்ற மண்குறியை நெற்றி முதலியவிடங்களில் அணிந்துகொள்ளாதிருப்பவர்கள் என்றும், காத்யாயன ஸூத்திரப்படியும் யாக்ஞவல்கிய ஸ்மிருதிப்படி|சுருதி மற்ற ஸ்மிருதிப்படியுமான ஸதாசாரத்தை உடையவர்கள் என்றும் விசதமாகஸ்பஷ்டமாகிறது. இவர் மாத்திரமல்ல, ஸ்ரீபாஷியகாரரால் மிக உகக்கப்பட்டதாயும், திவிய தேசங்களுக்குள் முக்கியமாயுமுள்ள கோவில் திருமலை பெருமாள் கோவிலென்ற மூன்று திவிய தேசங்களிலுமுள்ள திருவாராதகர்களெல்லாம் ஸநாதனகாலந்தொடங்கி இதுவரையில் வடகலைப் புண்டிரத்தை உடையவர்களாயிருக்கிறார்களேயொழிய, உருத்திரசூலம் போன்ற அசாஸ்திரீய புண்டிரங்களையுடையவரல்லர். தென்கலை புண்டிரம் பாவதுஷ்டம். ஆகையாலேயே மூன்று திருநாமங்களும் சூலபுண்டிரதாரிகளைத் தம் தமக்கு ஆராதகர்களாய் ஏற்றுக்கொள்ளவில்லை. இவ்வர்ச்சகர்களும், பெருமாள் திருவுள்ளம்போல் சூலபுண்டரிகளோடு ஸம்பந்தத்தையாவது, போஜனப்பிரதி போஜனத்தையாவது, இராகவபட்டனோடு தென்கலையார் வீட்டுப்பையன்களை ஸ்வீகாரமாகவாவது ஏற்று நடக்கவில்லை. ஆகவே ஸ்ரீரங்கம், திருமலை, பெருமாள் கோவிலிலுள்ள எல்லா அர்ச்சகர்களும் பரிசுத்தமான வடகலையார்களேயொழிய மிசிரவடகலையார்கூட இல்லை. மிசிரவடகலையார் என்பவர் சிற்சிறிது பிராகிருத பாஷையில் வாஸனையுள்ளவர். கேவலம் வைதிகரும் மந்திரவித்தாந்தநிஷ்டர்களுமான ஸ்ரீவைஷ்ணவாசாரியர்கள் ஆராதகர்கள் தான்.

விசேஷ நிரூபணம்.

சென்ற பிரமோதூத-ளு கார்த்திகை-மீ முதல் "கோயில் ஸம்பிரதாய தீபிகை." என்ற ஓர் மாதாந்தர ஜர்னல் தமிழ் பாஷையில் வெளிவந்து கொண்டிருக்கிறது. நாளது ஆனிமாதத்திய ஜர்னலும் வெளிக்கு வந்துவிட்டது. இதில் அயதார்த்த விஷயங்கள் பெரும்பான்மையாக காணப்படுகின்றன. இதற்காகவே "யதார்த்தவாதினீ" என்ற மாதாந்தரஜர்னலை இந்த ளு வைகாசி மீ முதல் யாம்பிரகாசப்படுத்த தொடங்கினேம். ஸ்தாலீபுலாகநியாயம் போல் ஓர் விஷயம் குறிப்பிடப்படுகிறது யாதெனில் ;—

" அர்ச்சகர்களை, 10 பெயர் மாத்திரமுள்ள தனி ஜாதியார் என்றும் யாதொரு ஸ்ரீ வைஷ்ணவ வகுப்பிலும் சேராதவர் என்றும், அர்ச்சக "கம்யூனிடி" என்று தனியாக ஐந்து வருஷங்களுக்கு முந்தி ஸபையை நடத்தினவர் என்றும், தொழில் முறையைக்கவனித்தறியாமல் வடகலை ஸபையில் காரியம் செய்து வருகிறார்கள் என்றும், தர்மகர்த்தர்கள் இவர்களைக் கவனிக்கவில்லையென்றும் ஆனி மீ ஸஞ்சிகை, 3-வது பக்கத்தில் செப்பப்பட்டிருக்கின்றது."

இவைகளைப்பற்றி விசாரித்துப் பார்க்குங்கால், முற்றிலும் பொய்யாகவிருக்கிறது. அதாவது அர்ச்சக கைங்கரியத்திற்கு மாத்திரம் ஸ்ரீரங்கத்திலிவர்கள் 12-பெயர்களாயிருக்கிறார்களேயொழிய ஸ்ரீ வைஷ்ணவ வகுப்பு தருமாசரண, சிரௌதஸ்மார்த்த தர்மாசரண விவாஹஸம்பந்தாசரண, போஜனப்பிரதி போஜனாதிகளில் அனாதிகாலமாக வடகலை ஸ்ரீ வைஷ்ணவர்களோடு கூடினவர்களாய் புத்திக்கு எட்டினவரையில் ஆதார மூலமாய் நன்கு பிரகாசமாகிறது. அதன் விபரமாவது ;—

1893-ளு-த்தில் அர்ச்சகர்கள் எல்லோரும் ஒவ்வொருவராய் இதற்கு முன்காட்டிய விபரப்படி கொடுத்திருக்கிற ஸ்ரீ-டி-மு கோர்ட்டு வாக்குமூலங்களில், பெரிய தேவராஜபட்டர் என்ற அர்ச்சகர், தமக்கு 59-வது வயதாகவும், தம்முடைய தகப்பனார் அய்யபட்டர் தாயாருள்படதம் வரையில் அர்ச்சகத்தொழிலில்லாத வடகலை ஸ்ரீ வைஷ்ணவர்களகத்துப் பெண்களையே விவாஹம் செய்து வருகிறோமென்றும், தங்களுடைய வீட்டுப் பெண்களை ஸாதாரணமான வடகலை ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு விவாஹம் செய்து கொடுத்திருக்கிறோமென்றும், ஸூத்திரப்படியுள்ள சிரௌதஸ்மார்த்தாசாரமுள்ளவர்களென்றும் அவர்களோடு போஜனப்பிரதி போஜனாதி

JL 13040

[illegible] அனுஷ்டித்து வருகிறோமென்றும் கூறியிருக்கிறார்கள். இதனால் மேற்கூறப்பட்ட நான்கு ஆக்ஷேபங்களும் வெகு தூரம் ஓடிவிட்டன. இப்படி அவரவர்களுடைய நடவடிக்கைகளை செம்மையாய் அறிந்து கொள்ளாமல் தன்மனதில் தோனுகிறவைகளையெல்லாம் எக்காரணத்தைக்கொண்டு வரைகின்றனரோ நமக்கு தெரியவில்லை. ஒருசமயம் அர்ச்சகர்கள் வடகலை திருமண்காப்பையும், வடகலையார் அனுஷ்டித்துவரும் ஸதாசாரங்களையு மனுபவித்து வருகிறார்களோ, இன்னும் சூலபுண்டிரத்தையும், சூத்திர விதவைபோல் இறந்த பட்டர்களுடைய விதவைகள் ஸகேசியாகவில்லையே என்பதையும் பற்றிய அஸூயையா லெழுதுகின்றாரோ தெரியவில்லை. சுருதியும், ஸ்மிருதியும் ஸதாசாரங்களை அனுஷ்டிக்க நேத்திரங்களென ஸ்ரீ பகவத்கீதை சாவித்தது. இதை யனுசரித்து ஸ்ரீ கீதார்த்த ஸங்கிரஹமென்ற ஸ்ரீ ஸூக்தி **"அசாஸ்திர மர்ஸாரம் க்ருத்ஸ்னம்."** என்றது. இதை அருளிச்செய்தவர் ஸ்ரீ பாஷியகாரருக்குப் பரம குருவான ஸ்ரீ யாமுனாசாரியர். நியாயமிப்படியிருக்க, ஸ்ரீ வைஷ்ணவஸம் பிரதாயமானது, எந்தெந்த ஸ்ரீ ஸூக்திகளைப் பிரமாணமாயுடைத்தாயிருக்கிறதென்று புஸ்தகப் பெயர்களைக்கூட அறியாத ஒருவர் யதார்த்தமான விஷயத்தை எப்படி அறிவார்? என்று ஸம்சயமுண்டாகிறது. இதனாலேயே நீடித்ததான ஸ்ரீ வைஷ்ணவத்துவமில்லாதவரும், "கதிஸ் ஸம்ஸர்கிணாமபி." என்ற இரஹஸ்யங்களிலெடுத்தருளிய ஆதாரப்படி இன்னமும் ஸ்மார்த்தர்களான மிசிரயாஜிகள் சம்பந்தமுடையவருமானவர்கள், சிறிதேனும் ஸ்ரீ இராமானுஜ ஸித்தாந்தஸம்பிரதாயங்களை அறியமுடியாதவர், என்பது திண்ணமாயிற்று. ஷெ ஆளவந்தார் என்ற ஸ்ரீ யாமுனாசாரியர் அருளிச்செய்த **"ஆகமப்பிராமாண்யம்"** ஸ்ரீ ஸூக்தியை வித்துவான்களிடம் விசதமாய்க் கேட்டறிந்தால், அப்பொழுதுதான் அர்ச்சக கௌரவம், ஸ்ரீ வைஷ்ணவஜாத் யேகத்வம், முதலியன நன்றாய்த் தெரிந்துகொள்ளக்கூடும்.

மேலும் இந்த ஸ்ரீ ரங்கத்திலுள்ள அர்ச்சகர்களைத்தான் நமது நண்பர் ஸ்ரீ கிருஷ்ணனை நினைத்து எப்பொழுதும் த்வேஷித்து வந்த கம்ஸன் போல் த்வேஷித்தும் தூஷித்தும் எழுதுகிறார். இதைப்போன்ற திருப்பதி என்ற ஸ்ரீ னிவாசனை ஆராதிக்கும் அர்ச்சகர்களெல்லாம் வடகலையாராகவும், வடகலைத் திருமண்காப்பையுடையவர்களாகவுமிருக்கின்றார்களே அதற்கெங்கே போவார். இதுபோல் காஞ்சீபுரமென்ற பெருமாள்கோவில் வரதனைப் பூஜிக்குமர்ச்சகர்களெல்லாம் வடகலை ஆசாரத்தையும், வடகலை திருமண்காப்பையுமுடையவர்களாயிருக்கின்றனரே அதற்கென்ன செய்வார். இவ்வாறாக ஸ்ரீ ரங்கநாதன், ஸ்ரீ னிவாஸன், ஸ்ரீ வரதன் என்ற மூன்று பெரு

ஸாத்விகஸ்வாமிகட்கோர் விக்ஞாபனம்.

நம்மாவிதிலெழுதப்படும் விஷயங்களுக்கெல்லாம் வேண்டிய சாஸ்திரப் பிரமாணங்களை (12)-வது ஸஞ்சிகைக்குப்பிறகு வருஷமுடிவில், ஸம்ஸ்கிருத பாஷையாகையால் கிரந்தாக்ஷரத்தில் அச்சிட்டுத் தனி ஸஞ்சிகையாக வெளியிடப்போகிறோம். இதன்நடுவில் எவருக்காவது அறிய விருப்பமுண்டானால், மத்தியஸ்தரான மதத்திரய வித்வான்களைக்கூட்டி ஓர் ஸபை வைத்துக்கொண்டு, பொது ஸ்தலத்திற்கு நம்மைக் கூப்பிட்டால் அப்பொழுதே கேழ்விகளுக்கு ஸமாதானம் சொல்லத்தயாராயிருக்கிறோம்.

வித்வான்—வங்கீபுரம்; R. V. ராமானுஜாசாரியார்,
ஸ்ரீரங்கம்.

ஸ்ரீரங்கம் கோயில் ரொடேஷன் டிரஸ்டி நியமனம்.

தற்காலம் கமிடிபோர்டு இல்லாததால், நாளது பிரஜோத்பத்தி-ஹூத்தியமுறைக்கு, ஸ்ரீ உப. வே. ரங்காசாரியார் மைனாராயிருப்பதால், அந்த ஸ்தானத்தில் ரொடேஷன் டிரஸ்டிகளுக்குள் ஒருவரான ஸ்ரீ உப. வே. வேதவியாஸ வேங்கடஸுதர்சனபட்டர் ஸ்வாமியாரானவர், ரிலிஜஸ் எண்டோமெண்டு போர்டாரவர்களால் நியமிக்கப்பட்டு வேலை பார்த்துவருகிறார்.

மேலும்; ஸ்கீம் ரூல்படி வருகிற 1341-ம் பஸலிக்கு எக்ஸிகூடிவ் டிரஸ்டியை நாளது பஸலி வைகாசி-மீ கடைசிக்குள் தேர்ந்தெடுக்கவேண்டியது டிரஸ்டி போர்டாரின் காரியம். அதுநிமித்தம், 14—6—31-ல் டிரஸ்டிகள்கூடிய மீட்டிங் நடைபெறவில்லையாதலால் தேர்ந்தெடுக்கப்படவில்லை. தற்காலம் கமிடி போர்டில்லாததால், இதன் நியமனமும் தேவஸ்தானம் காரியத்திற்கு குந்தகமின்றி எண்டோமெண்டு போர்டாரவர்களே நியமிக்க வேண்டியிருக்கிறது.

மகா-ள-ள-ஸ்ரீ K. கஸ்தூரி ரெங்கய்யங்கார் அவர்களுக்கு டிரஸ்டி பீரீடு, 28–7–1931 ஒடு ஓவராவதால், தற்காலம் கமிட்டி போர்டு இல்லாமலிருப்பதுகொண்டு, ஷெடி போஸ்டிற்கும் தகுந்த ஒருவரை ரிலிஜஸ் எண்டோமெண்டு போர்டாரவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டியதாயிருக்கிறது. 16–6–1931.